Fachhochschule Nordwestschweiz
Pädagogische Hochschule

# ESKE
## Evaluation des compétences scolaires en langue première

# TAMOUL

## Série de tâches de 3 à 4 ans d'expérience scolaire

Pädagogische Hochschule FHNW 2021 / Haute école pédagogique FHNW 2021

Professur Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter / Chaire de didactique de l'allemand et du plurilinguisme chez l'enfant


**பயிற்சிகள்**

1. **பின்வருவனவற்றை வாசித்து சரியான பெயரைச் சுற்றி வட்டமிடுக.**


அ) நாய், ஆடு, குதிரை என்பவற்றைக் கண்டறிந்து வட்டமிடுக.



ஆ) காலணி, காலுறை, உடையைக் கண்டறிந்து வட்டமிடுக.



இ) தேநீர் அருந்தும் கோப்பை, பீங்கான், கத்தியைக் கண்டறிந்து வட்டமிடுக.








© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**2. பின்வருவனவற்றை வாசித்து சரியான பெயரைச் சுற்றி வட்டமிடுக.**


அ) எனது மாமாவின் கடை ஓர் உணவகத்தின் பக்கத்தில் உள்ளது. அவரின் கட்டிடத்திற்கு முன் உள்ள ரோஜாப்பூக்கள் மிகவும் பெரியவை. அடுத்த கிழமை ஒரு பெரிய விற்பனைச் சந்தை உள்ளதால் அவருக்கு நிறைய வேலைகள் உள்ளது. மாமாவின் கடையைக் கண்டறிந்து வட்டமிடுக.



ஆ) எங்கள் வகுப்பறையில் மேசைகள் வட்டமாக ஒழுங்குபடுத்தியுள்ளன. மரியாவின் மேசை கதவுக்குப் பக்கத்தில் உள்ளது. மரியாவின் நான்கு புத்தகங்கள் மேசையின் மேல் உள்ளது. மரியாவின் மேசையை வட்டமிடுக.



இ) எங்கள் பூங்காவில் உள்ள விளையாட்டு மைதானத்தில் பல சிறுவர்கள் விளையாடுகிறார்கள். மரத்திற்கு கீழ் உள்ள கதிரைகளில் தாய்மார்கள் இருக்கின்றார்கள். கிறிஸ்ரியானின் தாய் பூக்கள் உள்ள பக்கத்தில் உள்ள கதிரையில் இருக்கின்றார். கிறிஸ்ரியானின் தாயாரைக் கண்டறிந்து வட்டமிடுக.





© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**3. படத்திற்குப் பொருத்தமான பந்தியைக் கண்டறிந்து வட்டமிடுக.**



| | | |
|---|---|---|
| சிறுவன் தனது பிறந்தநாளை முன்னிட்டு தனக்கு விருப்பமான உணவான ''ஸ்பகட்டியை'' உண்ண விரும்புகின்றார். அவனது தாயார் நிறைய ''ஸ்பகட்டியை'' கொடுத்தார். அது மிகவும் சுவையாக இருந்தது. | சிறுவன் கடந்த வாரம் ஒரு பெரிய ஆச்சரியத்தை அடைந்தார். அவனது மாமனார் அவனுக்கு ஒரு பீங்கானில் ஒரு கடல் நண்டினை வைத்தார். அதன் கால் பெரிதாக இருந்தது. பார்ப்பதற்கு ஆபத்தாக இருந்தது. | சிறுவன் தனது அம்மம்மாவிடம் விரும்பிப் போவான். அவர் அவனுக்காக விரும்பிய உணவுகளைத் தயாரிப்பார். நேற்று அவர் ''சொக்லேட் கேக்'' ஒன்றைத் தயாரித்தார். அவன் ஒரு பெரிய துண்டு கேக்கை உண்டான். |



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**4. பின்வரும் பந்தியினை வாசித்த பின்னர் சரியாயின் "சரி" எனவும், பிழையாயின் "பிழை" எனவும் புள்ளடி இடுக.**

நாய்களுக்கும் மனிதர்களுக்கும் ஒரு நீண்ட வரலாறு உண்டு. சில நாய்கள் காட்டிலும், மற்றையவை மனிதர்களிற்கு காவல் நாய்களாகவும், வேட்டை நாய்களாகவும், காவல்த்துறை நாய்களாகவும் அல்லது வீட்டுப் பிராணிகளாகவும் வளர்கின்றன. நாய்கள் விழிப்புணர்வு அற்றோருக்கு அன்றாட வாழ்வில் உதவி புரிகின்றன. உதாரணமாக பெரிதும் போக்குவரத்துத் தேவைகளை ஈடுசெய்கின்றன. நாய்கள் அனைத்துக் கண்டங்களிலும் வசிக்கின்றன. நாய்கள் உறவு முறையில் ஓநாய்களுக்கும் நரிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்புடையவை.

அ) நாய்கள் உலகில் எல்லா இடங்களிலும் உள்ளன.
சரி ☐
பிழை ☐

ஆ) நாய்கள் அன்றாட வாழ்க்கையில் விழிப்புணர்வு அற்றோருக்கு உதவுகின்றன.
சரி ☐
பிழை ☐


இ) காட்டு நாய்கள் இப்பொழுது இல்லை.
சரி ☐
பிழை ☐

ஈ) ஓநாய்களுக்கும் நாய்களுக்கும் தொடர்பு உண்டு. ஆனால் நரிக்கு இல்லை.
சரி ☐
பிழை ☐



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**5. படத்திற்குரிய கதையை உரத்து வாசிக்கவும்.**



**சிங்கமும் நரியும்**

ஒரு வயது முதிர்ந்த சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அது மிகவும் பலவீனம் அடைந்ததால் அதற்கு வேட்டையாடுவதற்கு இயலவில்லை. எனவே அது தனக்கு ஒரு குகையைத் தேடி, அங்கு வசித்து வந்தது.

மிருகங்களின் ராஜவை நினைத்து மற்றைய மிருகங்கள் வருத்தப்பட்டன. அதனால் அவை ஒன்றன் பின் ஒன்றாக சிங்கத்தைப் பார்க்க வந்தன.

ஒரு நாள் சிங்கத்தைப் பார்க்க நரி வந்தது. அது குகைக்கு முன் நின்றது. சிங்கம் "உள்ளே வா என்றது. நான் மிகவும் பலவீனமாகவுள்ளேன் உன்னை வந்து சந்திப்பதற்கு".

அதற்கு நரி கூறியது "உங்கள் குகைக்கு முன் பல மிருகங்களின் தடயங்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு மிருகமும் மீண்டும் வெளியே வரவில்லை. எனவே நான் மற்றைய விருந்தினர்கள் வெளியே வரும் வரை காத்திருக்கின்றேன்."



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**6. பயிற்சி 5 இல் உள்ள விடயங்களை வாசித்த பின்னர் பின்வரும் வசனங்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் குறிப்பிடுக.**

அ) முழுக் கதையிலும் சிங்கம் குகைக்குள் இருந்தது. சரி ☐ பிழை ☐

ஆ) நரி குகைக்குள் சென்றது. சரி ☐ பிழை ☐

இ) சிங்கம் மற்றைய மிருகங்களைத் தின்றது. சரி ☐ பிழை ☐



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**7. பயிற்சி 5 இன் கதையை விளக்கிக் கூறுக.**




© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**8. பயிற்சி 5 இன் கதையை மீண்டும் வாசித்த பின்னர் பின்வரும் வினாக்களுக்கு விடை கூறுக.**

- சிங்கம் நோய்வாய்ப்பட்டிருக்கலாம் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?
- நரி ஏனைய விலங்குகளை விடத் தந்திரமானதா? ஏன் நீங்கள் அவ்வாறு நினைத்தீர்கள் என்பதனை எடுத்துக் கூறுவீர்களா?
- நாங்கள் இக்கதையில் இருந்து ஏதாவதைக் கற்றுக் கொள்ளளாமா? ஏன் நீங்கள் அவ்வாறு நினைத்தீர்கள் என்பதனை எடுத்துக் கூறுவீர்களா?


© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**9. பின்வரும் 5 படங்களில் ஒன்றைத் தெரிவு செய்து அப்படத்தின் எந்தத் தொழில் காணப்படுகின்றது என்பதனை விளக்குக.**














© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**10.** நீங்கள் வயதானால் எத் தொழிலைச் செய்ய விரும்புகின்றீர்கள் என்பதைச் சிந்தித்து அதைப்பற்றி சிறிய பந்தி எழுதுக.



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter